W. Annamalai Pillai 4-10-'36

உ

சிவமயம்.

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணாயநமஃ.

காமரசமஞ்சரி.

சந்திரகுலமகாராஜராகிய
எட்டயபுரம்
சமஸ்தானத்து ஆதீனகர்த்தர்
ஜெகவீரராமவெங்கடேசுரஎட்டப்ப
மகாராஜ ஐயனவர்கள்பேரில்
ஷை சமஸ்தானத்திலிருந்த
புலவர்திலகராகிய

கடிகைமுத்துப்புலவர்

பாடியது.

இஃது,
மேற்படிசந்ததியில்
இப்போதுபட்டாபிஷேகராக
எழுந்தருளியிருக்கும்,
ஜெகவீரராமகுமாரெட்டமேந்திர
ஐயனவர்கள்உத்தரவின்படி
ஷை சமஸ்தானம் மனோவிர்த்தி டிப்பார்ட்மெண்டு ஏஜெண்டு
கே - வெ, எட்டப்பபிள்ளையவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Madras:
PRINTED AT THE CITY PRESS.
No. 16, Thumboo Chetty Street
1879.

உ

சிவமயம்.

சாற்றுகவிகள்.

எட்டயபுரம் சமஸ்தானம்

வித்துவான்

கடிகை நமசிவாயப்புலவர்

இயற்றியது.

ஆசிரியவிருத்தம்

பூமேவுமேருமணிசிங்கமாலசெண்ட
பொருத்தலின்விடத்துறுதலின்
புனறவியுதிதலிற்பின்னைமறுவுறலிலை
புணையொவாபுணையிலாத
பொதுகமிகுசொடைகந்தவீரமூலயோபுதல
பொருந்நிவளாபு நடமேருப
புருடாதநமபுருட சிகாமபருடோததயன
புருடோதநமன்னிவனெனக
கோமேவுசந்திரமைரினற்சிலவார
குலமியற்றியவனேக

கோடிபுண்ணியபலமுமொன்றாய்த்திரண்டுருக்

கொண்டருளும்வச்சிரதேகன்

குணசுகுணநவமணிப்பூடணாலங்கார

கோலாகலசவுந்திரன்

கொடையளிநடாத்துசெங்கோன்மைகுடியோம்பலிக்

கொள்கையேபுரியுநேமன்

மாமேவுமெட்டபுரமாதிக்கநாடோறும்

வளர்ந்தேறவந்தசெல்வன்

மகாபிரபலம்பெறுஞ்செகவீரராமக்கு

மாரெட்டமேந்திரபூமன்

மாமதிதனாலெலாப்பொருளையும்விளக்கல்போல்

வம்மிசாவழியில்வந்த

மகிமைகளனைத்தையுந்தன்மதிதனால்யார்க்குந்

மகிழ்வுறவிளக்குவான்போற்

றேமேவுதென்னிளசைவெங்கடேசுரவெட்ட

தெய்வேந்திரன்மீதுரன்னாட்

ஜெகமெச்சுகடிகைமுத்துப்புலவனெனும்வித்வ

சிரோமணியினியற்றும்

சிந்தைநாவூறுகாமரசமஞ்சரியதாந்

திவ்யப்ரபந்தமதனைச்

சென்னைமாநகரிலச்சிடுவித்துலோகப்ர

சித்தமுண்டாக்கினானே.

சுபமஸ்து.

சென்னை,

வேதாகமோக்தசைவசித்தாந்தசபையின்

அடியார்களிலொருவராகிய,

ம-ள-ள-ஸ்ரீ,

வித்வான், திரு-வி, சிவப்பிரகாசையரவர்கள்

பாடியது.

ஆசிரியவிருத்தம்.

பூமகளுக்கணிவதனமெனத்திகழுந்தென்னிளசைபுரக்கும்வாய
மையருவுஜகவீரராமவெங்கடேசுரவெட்டேந்திரன்மேல்
பாமருவுகடிகைமுத்துப்புலவனருங்கற்பனையாப்பகருஞ்சீர்சால்
காமசமஞ்சரியைக்குமாரெட்டனச்சியற்றிக்காட்டினனால்.

ஷை சபையடியார்களிலொருவராகிய

ம-ள-ள-ஸ்ரீ,

வித்வான், கு-குப்புசாமிஆசாரியவர்கள்

பாடியது.

ஆசிரியப்பா.

பொன்மலிகற்பகப்புத்தேள்வழுத்து
மெண்ணருஞ்சீர்சாலிளைசைநீடியுலகை
யாண்டருள்வரோதயனம்பலத்தழக
னடிமலர்க்கன்பறுதுலர்க்கிரங்கி
வரையாதளிக்கும்வள்ளலாம்வெங்க
டேசரெட்டேந்திரனெட்டயபுரத்தி
லேர்கவிற்றிருக்குமாண்டகைதன்பா
லன்புமீக்கொடுபுலவர்க்கரணுமெனு
முழுதுணர்கடிகைமுத்துப்புலவ
னியற்றியன்காமரசமஞ்சரியென்
றொருநூலதனையோதுமவ்வேந்தல்
குடிமரபில்வருகுமாரெட்டேந்திர
மகிபனிவ்வுலகின்மாண்பெறவச்சிடு
வித்தனன்யாரேவியவாதவரோ.

உ

சிவமயம்

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧	௫	சிர்த்தி	கீர்த்தி
௨	௨௰	லோட்டினன்	லோடினன்
௩	௬	ஞைபிய	ஞைறிய
௩	௧௬	வென்பாஸ்லா	வென்பதல்லா
௫	௧	வெங்டேச	வெங்கடேச
௫	௭	முயர்வாழ்	முயர்வாற்
௭	௰	தொக்க	தொந்த
௮	௭	பின்ஞனை	பின்ஞணை
௮	௮	தன்ஞனை	தன்ஞணை
௮	௧௨	பூலெக	பூலோக
௯	௧௧	காமின்ட	கர்மின்ட
௯	௧௬	சுரதரணை	சுரதாணை
௰	௧௪	மண்டில	மண்டல
௧௧	௮	புகல்வோ	புகலவோ
௧௧	௯	மானிறத்தாற்	மானிறத்தார்
௧௩	௧௧	கன்மா	கண்மா
௧௫	௬	மீருமலர்	மீறுமலர்
௧௫	௮	பார்க்கு	யார்க்கு
௧௫	௧௭	வா	வர
௧௬	௭	தன்றே	தென்றே
௧௬	௰	யாஞ்	யரச்
௧௮	௧௫	மிணைத்	மிணைங்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணாயநம:.

காமரசமஞ்சரி.

காப்பு.

இக்கிலங்கொண்டாடும்வெங்கடேசுரெட்டமேந்திரன்மேன்
மன்னிவளர்காமரச மஞ்சரிக்கு - மின்னுமுடிக்
கம்பகும்பத்தானையொருகையில்வைத்துப்பந்தாடுங்
கம்பகும்பத்தானைமுகன்காப்பு.

நூல்.

பொார்பூத்தபெருகரத் தெய்வப்பாந்தாமன்
காார்பூத்தவேலைகடைந்தநாட் சீர்பூத்த

செய்யதிருவுடனேதெள்ளமுதம் வந்துதிக்கத்
துய்யமதிமேலாகத்தோற்றுதல்போல் வையகத்தைத்

தாங்குர்தியாகசமுத்திரத்திற்கீர்த்தியென
வோங்குநிலவுமுதித்தருளப் பாங்குடனே

அந்தப்புலவர்க்கவனமுதமீந்ததுபோ
லிந்தப்புலவர்க் கிவனுதவ வந்ததினு

லெங்கள்துரைச்சிங்கம்வெங்க டேசுரெட்டமேந்திரனே
செங்கண்முகிலாகவந்து சென்மித்தான் பைங்கமலை

மாலவனைச்சேர்ந்தான்மறுவென்பார்தாமரையின்
மேலமரில்வண்டு விழுமென்பார் சாலவே

எண்ணித்தவம்புரிந்து மெங்கோன்செழுங்கமலக்
கண்ணிற்குடியாய்க்கலந்திருந்தாள் வெண்ணிறத்தாள்

முந்தவேமேனிமுழுதும்வெள்ளையாயோட்டந்
தந்தநூல்வேதனையேசார்ந்திருந்து மிந்தப்

பிரமனையேசேர்ந்ததினாற் பேறுபெற்றதென்ன
விரவியபாட்டுக்கிடமாய்மேவித் திரிவதென

வாணிதவம்புரிந்து மன்னர்பிரானன்னாவிற்
காணியெனவந்திருக்கக்கண்டோமே பூணு

மறங்கொண்டுவிந்தை மலைவாயிருந்துந்
திறங்கொண்டகல்வெதுப்பமுசெய்ய வுறைவதனைச்

சொலவதென்னமாலாற்றுவளாயலேயிருக்கச்
செல்வமடமங்கைதவஞ்செய்ததனால் வில்விசய

னம்புயக்கண்மேவினனென்றுங்கேவிசயமங்கை
யம்புயத்தின்மேலேயாயிருந்தா ளம்புவியிற்

பாரியடித்துப்பரித்தான்குருணையென்போ
னூரிலிராமற்காட்டிலோட்டினான் சீருடைய

கன்னனென்றுமில்லையென்றுகையைவிரித்தானுறந்தை
மன்னன்புலவர்மேல்வாளெடுத்தா னிங்கிலத்தி

லாரேகொடுப்பவரென்றாராய்ந்து தென்னிளசை
யூரேபுரந்தோனுலகளந்தோன் பாரோரு

மேந்தவளாந்தபுயத்தேந்தலவெங்கடேசுரெட்டன்
மாந்தர்தமையுபுரக்கும வள்ளலெனச் சாந்தமுலைத்

தானத்திருப்புகலாய்ச் சாந்தமெய்யகோன்கைவனசத்
தானத்திருப்பிடமாய்த்தானிருந்தா னறிய

வாதிமாலும்பயங்கொண்டாத்தகடல்வாய்ப்புகுந்தான்
வாதியாய்ச்சேரனமலைபுகுந்தா னேதுங்காற்

காபபிடுவாரில்லாமற்றன்னைப்பேய்க்கருசியன்றோ
வேபபிலையைததான்சுமந்தான்மீனவாகோன் வாய்ப்பெ
(ாவே

மல்லாடிமாற்றவரிற்சோழர்தாங்கடிகரும்
புல்லாவலாலெடுப்பாரபுற்கொடியை யெல்லாரு

மச்சமுள்ளாரென்றேயறிந்தவயிரியமா
னுச்சமெனங்கோனுளந்திருந்தான மெச்சு

றவம்புரியுமோனிசவுபரியாங்கிருஷ்ண
னவன்பிரமசாரியென்பதலலா லிவர்கள்பெற்ற

மைந்தரனேகரென்பார மைந்தாபெற்றபிள்ளைகளா
ரந்தமரபுமறியோமோ விந்த

நிலத்துக்குராளானை நிகருளைபோமெங்கோன்
குலத்தைத்தொட்டென்றுங்குறிக்கப பெலத்துடனே

சென்மமகபபேறுய்ச் செனித்தவெங்கடேசுரெட்ட
தன்மதுரைகொடுக்குஞசந்தான நன்மைதரு

மொன்றேமகவாயுதித்து லெட்டுப்போகு
மென்றேவளருமியல்பினு னன்றேயாம்

பந்தாளமென்றறிந்துபார்த்துதராதானத்திற்
சந்தானமாதுதரித்திருந்தா , ணநதாந்

திசையறியராகவனுந் தேவிதனைத்தோற்றன்
விசையனுமோபேடியாய்விட்டான் புசபலத்தான்

மல்லுந் துவீமன்மடையன் விக்ரமார்க்கனென்றுற்
சொல்லுங்குயவனுக்குத்தோற்றனே தொல்லுலகில

கொற்றமனவீரங் குறித்தாலிவ்வினையல்லான்
மற்றவனைக்காணே மறுத்தென்ன வுறற

கருங்கலையூர்திகருக்கோட்டைவேந்தன்
மருங்கிற்குடியாய் வளர்ந்தாள் பொருந்தியே

மாயன்கடல்கடைந்தமாத்திரத்திலாலம்வந்து
காயமனதுகலங்கியே தூயமதிப

பின்னேயொழித்தான். பெலமுஞ்சவுரியமு
மென்னேயவன்படைத்தானென்பதினுன் முன்னுளில

வந்தவொற்றையாலமருளும்பகைதடிந்தான்
வந்தவீராலமருங்கமைத்தான் சந்ததமு

மஞ்சாதவெற்றியதுலன்வெங்கடேசுரெட்டன்
மஞ்சாருஞ்செங்கைவளத்தினு னெஞ்சாத

துன்றுபுகழாளி தொடையேயிடமாகு
மென்றுசவுரியமானெயதினு ணன்றிதர

வாய்ந்தவெங்கடேசுரெட்டன்வாய்த்தவட்டலட்சுமியுந்
தோய்ந்தகணவனெனத்தோன்றினா னாய்ந்துரைக்கிற்

காட்டுமுறையிடமேகஞ்சஞ்சாரத்திடமே
மீட்டுதலாற்கும்பமுனியெய்திடலா லோட்டத்திற்

சாருங்கலைமானைத்தாங்குவனப்பாலதனாற்
சேரும்புயங்கரகனா சேர்ந்திடலாற் பாரமா

யுன்னும்பூமேலாமுயர்வாழ்பிரமனைப்போன்
மன்னும்பொதியமலையினான் றன்னியே

கங்குகடாவுதலாற்காருருவநீடுதலா
லங்குவளைபாணி யமைதலால் பொங்கியே

சக்கரமேதாங்குதலாற்றண்டலைக்கொண்டேந்துதலான்
மிக்கவுரங்கொண்டதிருமேன்மையாற் றக்கதெனச்

சிந்துவாரத்தொடம்பு சேரத்தரித்திடலா
லந்தமால்போலும்வையையாற்றினான் சந்ததமுஞ்

சங்காரஞ்செய்வனவாற்றுமறையுந்தாங்குதலா
லங்கார்முடிக்காரமைத்தலான் மங்காத

நீலக்களம்பரிக்குநீர்மையாலம்பலஞ்சச்
சூலபடைகிடக்கத்தோற்றுகையான் ஞாலத்திற்

கூட்டுபண்ணையேசாது கொண்டவளத்தாற்சிவன்போ
னாட்டுமுதுகுடிநன்னாட்டினான் வீட்டின்மணி

மேடைதொறுங்காரை வெண்மைதருங்காரை
யாடையெனச்சுற்றுமணங்காரைக் கூடவெடுத்

தேந்துசினகரமே யெந்துமினகரமே
சாந்தமுலையார்க்குஞ் சக்கரமே மாந்தரொன்பா

ராருமனோரதமே யானைபரிமாரதமே
யூருமிளசையெனு மூரினான் பாரதனிற்

கற்புடையாள்வந்ததுவுங் காண்மிதித்தகற்பாலே
கற்புடையாளாதல் கருதாரோ கற்பாலே

வெட்டிருப்பதாசைகொண்ட மின்னாரோயென்றறிந்து
தோட்டிருப்புமுல்லைத் தொடையினான் கூட்டமிட்டுச்

கோரம்புரிந்திருக்கோரம்பரவேலைக்
கோரம்புகவிடலாற் கோரமாய் நீரிசைய

வட்டமிடுவாரியைத்தவட்டமருவார்களுக்கு
வட்டமையவிட்டகன வட்டமாய்த் திட்டமாய்க

குந்தமேற்கொண்டுமெதிர்க்குந்தமாற்றானையும்வை
குந்தமேற்றப்பொருதகுந்தமாய் முந்தமுந்தக்

கந்துகம்போற்றாவியும்பல் கந்துகமோதிக்குதித்துக்
கந்துகமேற்றாவுதலாற்கந்துகமாய்ச் சிந்துவையும்

வாரம்பரிக்குமிணைவாய்த்ததெனவேபுவன
பாரம்பரிகரும் பரியினா ணீரிளைத்துந்

தும்பிக்கைநீட்டத்துதிக்கைதுதிக்கையென
நம்பிக்கைகெட்டு நடுநடுங்கி வெம்பிக்

கறையடியைத்தூக்கிவருங் காண்மயங்கிநெஞ்சம்
பறையடிக்கமாற்றார் பதுங்கக் குறைவில்லா

வீரகன்னடையாததண்டைவீறுகொண்டவோசைகண்டு
சேருமண்டகூடபந்துசேரவிண்டுபோர்மருண்டு

காரடைந்தவாரியொன்றுகாலடர்ந்ததாளடைந்து
சேரமண்டியாயுளம்புசேறலைந்துதூரவும்பர்

நாடடங்கவேலையண்டர்நாதனுங்கண்மூடியஞ்ச
ஊடிருந்ததேவரம்பையோரிரங்கவாடல்கொண்டு

சக்ரவெற்றைமுட்டியுக்ரசத்திவிற்பகைச்செருக்கை
விக்ரமித்துவட்டமிட்டுவெற்றிகொட்டகைக்குமெட்ட

வெட்டியக்கதிர்ப்பரப்பையிப்புறத்திமுங்கமுட்டி
முட்டிமத்தகத்தலெற்றிமுட்டைதட்டிவிட்டதொத்து

தெட்டுவெற்புமட்டநிக்குபெம்படிப்பிறைப்பதப்ப
கொட்டமிட்டதுட்டனைக்குமைத்துவிட்டுவிட்டதொக்க

வென்றுநடுங்கினதிந்தநெடும்புவி
நன்றிபுரிந்தவர்நம்பினர்துன்றியு

மின்பநுகர்ந்தனரெங்கும் வளர்ந்தன
ரன்புபுரிந்தனரஞ்சலிர்பின்பென

விந்திரனேயொன்றதுணையிந்தவகைவென்றுவெற்றி
தந்திடவேலோங்குமததந்தியினு   னந்தரத்தைப்

பொன்னகருடன்பொதிந்துதலைநீட்டுமெனச்
சொன்னகருடத்துவசமே   முன்னிலையா

யெட்டியசந்திரனை யேற்றுசந்திரகாவியிடால்
கட்டிமிகவிருதுகட்டினேன்   கெட்டியாய்த்

தையலர்பூமாலிகையுந் தண்டமிழ்ப்பாமாலிகையும்
வையந்தொழும்வாகைமாலிகையு மையமின்றி

யிம்முறையேகொண்டுவரவென்றுலகஞ்சொல்வனபோ
மும்முரசுமார்க்குமணிமுன்றிலா னம்முடைய(ன்

கண்ணப்பதேசிகனைக் கையெடுத்துச்சாத்தூர்வாழ்
வண்ணப்புயலைமனநில்வைத்துத் தண்ணளியாற்

பின்னுனையம்புபிடித்தவனும்பின்வாங்கத்
தன்னுனையம்புவிக்குத்தந்தருள்வோன் முன்னாட்

கருமைக்கடன்மானின்கால்கண்மராவாகாய்த்
திருகுமிராவணனார்சென்னி பெருகுதொகை

யொன்றுநான்சேழுபத்துக்கோர்கணைதொட்டெய்தபிரா
னென்றுபூலோகமியம்பவே வென்றிதரு

கொற்றவிசயக்குமாரவெட்டன்செய்தபலன்
முற்றுமுளையாய்முளைத்தருள்வோ னுற்ற

வரியரவின்மேற்பரந்தமண்டலத்திற்செங்கோ
லுரிமைசெயுநாளிலொருநாள் விரியுஞ்

சுதையடித்துச்சுற்றுச்சுவர்த்தலத்தின்முத்த
மதைநிரைத்தகோவையமைத்துப் புதியமணி

வச்சிரத்தூணாட்டிவடிம்புமதனாலேற்றி
யுச்சிமுகப்புமதாலுண்டாக்கி நிச்சயமாய்

வெள்ளித்தகடுக்கிவேய்ந்தகொலுமண்டபமே
பள்ளித்திருமாயன்பாற்கடல்போ லுள்ளிணங்கி

யேயுநிலத்தளத்திலிட்டமரகதமே
பாயுமொளிபரக்கப்பச்சிலையாய்த் தோயு

மருங்கிடையிற்கோவையமைத்தரத்னநீலங்
கருவளையம்போற்படர்ந்துகாட்ட வுருவாம்

பதுமராகத்தைப்பதித்தமைத்தபீட
மதுமலர்ச்செந்தாமரைப்பூமான வதனில்

வனசமங்கைவீட்டினைமொலிருந்தாற்போலு
மெனதுவெங்கடேசுரெட்டமேந்திரன் சனகிபுணர்

காந்தனிரவிகுலகல்ஷரவனரசர்
வேந்தனமதுதுவாரீற்றிருந்தான் சேர்ந்த

வுரகண்டகரீமிண்ட வுத்தண்டவந்தம்
பரகண்டகந்துகரோபந்த சரச

கெருவிதமனோகரசங்கீதபரிபால
பருபதகிரபுயபார மருவலரைத

தத்தளிக்கவெட்டுமுக்ரசங்காரருத்ரரண
சுத்தவுரிகோலசுரதரணை வித்வசன

சங்குமுழுங்குபிரசங்ககாம்பீரசக்ர
சங்கதரவிசையசங்கிராம துங்க

கமலைவிமலைகணவசுமுக
வெமதுவெங்கடேசுரெட்டமேந்த்ரா நமது

வழுதிதிருபம்வரைதோளுங்கொற்ற
மெழுதும்வெங்கடேசுரெட்டமேந்த்ரா தொழுது

திசைபுகழுமைவருக்காச்செப்பிவருந்தூதுக்
கிசையும்வெங்கடேசுரெட்டமேந்த்ரா வசனங்

கனியரசமொழுமங்கல்வித்தமிழுக்
கினியவெங்கடேசுரெட்டமேந்த்ரா தனதா

விதுரசதுரமதவெற்பரைக்குமுன்னே
யெதிரும்வெங்கடேசுரெட்டமேந்த்ரா வதிரும்

மலையைச்சிறநரிந்தவச்ரதராசோமத்
தலையைப்புனைந்தசரணு மலைவிலா

வீரவிக்ரமார்க்காவிசையாசமரமுக
சூரவுக்ரவாக்கிணுசக்ரிவா தீரகன

யோகமபோலபெரியோர்களனுகூலவென
மாகதருங்கட்டியரும்வாழ்த்துரைக்க வாகனையார்

கொண்டுவந்தகப்பமிந்தக்குப்பமிதுமெய்ப்புரவி (திற்
கண்டுவந்துகொள்கவெனக்கையெடுப்பார் மண்டலத்

கைக்களிற்றுக்கொட்டிரட்டிகப்பமிட்டாரிழுத்தார்
மக்கர்முத்துமாலைவரவிட்டா ரொக்கக்

குருதர்மலையாளர்கொண்டுவந்தகப்பம்
வெகுவரிசைநீபார்க்கவேணு மகராச

ராசவிசுவாசரகுராமவெனவேயுரைக்கப்
போசனிருந்தகொலுப்போலிருந்தான் தேசங்க

ளெண்ணேழும்வாரிதிகளெண்ணேழுமெண்டிசையு
மண்ணேழுமொன்றாய்வதிந்தனபோ லுண்ணேயங்

தந்தபரிசனமுந் தன்கிளையுமற்றவரும்
வந்ததுரைமக்கள்புவிமன்னவரு மிந்தத்

தாணிக்கதிபதிகடாறுபதிகள்
காணிக்கர்மிக்கதளகர்த்தர் வரிசையா

யாங்கிருக்கவேற்றரசரப்புறத்திற்காத்திருக்கப்
பாங்கிலுரியசனம்பற்றிநிற்க வோங்குபுகழ்

மன்னனிருந்தகொலுமண்டபத்துக்குள்ளிருந்த
பொன்னனையார்செய்திபுகல்வோ முன்னிசைந்த

வெள்ளைப்பளிங்குநிலமேலிருந்த மாநிறத்தார்
பிள்ளைப்பருவப்பெடையனமா முள்ளபடி

நீலத்தளத்திருந்தநீலக்கருப்பிகளு மா
மேலமருங்கோகிலம்போல்வீற்றிருந்தார் சாலவே

பச்சைநிறப்பீடிகைமேற்பச்சைநிறத்தார்காவி
லிச்சையுடன்மேவுமயிலென்றிருந்தா ரச்சமையிற்

செய்யமணிவேதிகையிற்சேர்ந்தசிவப்புமின்று
மையமில்லாச்செந்திருவொப்பாயிருந்தார் பொய்யலவே

வாராட்டுகொங்கைமடமாதொருத்தியெங்கோன்மேற்
பாராட்டுசெந்தமிழைப்பாடினாள் போராடி

விம்மவிலையேமிடறுமெய்யுமசையவில்லை
யம்மகுழையிரண்டுமாடவில்லை மைம்முகில்போற்

கொண்டைகுலுங்கவில்லை கொவ்வைதுடிக்கவில்லை
சண்டையிடுங்கெண்டையெனுஞ்சாயவில்லை கண்டது

ளிபபடிக்காணும்படிப்பாரொன் றுரைக்கப்பாடினு
ளபபடிக்கும்பெண்களனேகருண்டே மெய்ப்புடனே

நாட்டியஙகள்செய்யவும்பர்நாட்டியங்குவோாகளுமங
நாட்டியங்கிறிவர்கண்ணுட்டியரோ ' பாட்டியஙகு

பாதமிறித்தாளமுந்தபபாதமொழித்தாளமுமப
பாதமிலொபபாங்விரும்பாதவரா ரோதமிலாக்

காற்றுடிபோற்சுழலுங்காற்றுடியாமேதன்
காற்றுடியென்பன்விசைக்காற்றனே மேற்றுவத்

தேவரம்பைமாருமலேத்தேவரம்பைமாறுமெனத்
தேவரம்பெற்றென்னகண்டார்தேவனென்பார் பூவுலகிற்

காணுமிவ்வாறிவருக்காணுமயஙகும்வண்டு
காணுமெனபபதத்தைக்கண்டரோ பூணு

டலமபுருசிலம்புமணிசதங்கைக்கொத்தும
புலமபுமெனக்கண்டோாபுகல்வாா நலமபுரியும

பாட லதிகமென்பாரல்லாமற் பாாத்தவாக
ளாடலதிகமிவளாமென்பா ராடல

புரிநததிலும்பாடன்மிக்காய்பபூவையர்தேனமாரி
சொரிநதவிசைமிக்கெனவேசொல்லத் தெரிந்தவொரு

வீணையெடுத்தொருத்திமீட்டினுாரதனா
வீணையுரைக்கவென்றேவிண்புகுந்தார் நாணியே

தும்புருவுமீசன்றனைச்செவிக்குள்ளேபுகுந்தா
னம்புவியிலாரைநிகராயுரைப்போ மிம்பரிலே

இந்திரவோலக்கமன்றோவெங்களெங்கடேசுரொட்ட
சந்திரகிரிவேந்தன்சமுகமே வந்துவந்து

புத்தாரங்கட்பயமிட்டுமுன்பணிவோர்தங்களபுவிக்
குத்தாரங்கேட்டபதொருபாங்கா பத்தாளை

கட்டயமிடுவோர்நிலைமைசட்டடைபிட்டேசீட்டுக
கொப்பயமிடசொல்லவதொருபாங்க ரிப்படியே

சேலைபுடைசூழ்ந்தபுவிமேலரசாங்கமிவர
மேலைதரச்சொல்லவதொருபாங்கா சால

நெருங்குங்கொலுவிலிலமகளுமபொன்று
மருங்கிருக்கசெயபொன்மலைபோற பெருஞ்செல்வ

யோகங்குபெருமானுவந்திருந்துகுமப்புமலை
தாங்குமடவார்தமைநோக்கிப பாங்கிருந்த

மைதவழுங்கண்மடவீர்மாமலர்பூஞ்சோலைதனி
லையப்பவிளையாடுவோமெனறுரைத்தான் கைதொழுது

மாதர்களும்பின்னவரோடத்தாலந்தனக்குச
சீதளப்பூஞ்சோலைசிறப்பென்று சோதி

யெழுந்தான்மருப்பிசையேந்தியொன்றாகையாற்
கொழுந்தானைப்பாரமடந்தைதொட்டா னெழுந்தவே

வண்டுபடியுமதலைமையைப்பார்கசென்று
கொண்டுவருகவெனக்கூறினான் றண்டு

முடிக்குட்புவியையடக்கிநெடுவானை
பிடிக்குமிருகோட்டியானை பிடித்துப

புடவிக்குளெட்டுப்பொருப்பையுந்தூளாக்கிக்
கடலைக்கலக்குங்களிறு இடறி

யிடதவளையைநிலத்திற்புரட்டுங்
கடகரடமூற்றிறைக்குங்கைமாத் தடவிகடக்

கொம்பிரண்டுமூன்றாகக்கொண்டதுபோனெற்றியினு
ம்புலியைத்திண்டுமாசுவா விம்பரிலே

பாகர்திருத்தும்பருத்தமதயானைதனை
மேகமெனக்கொணர்ந்துவிட்டார்க ளேகமாய்க்

கொம்புமுரசுங்குமுகுமெனப்போர்விசயக்
கொம்புந்திருவுநின்றுகூத்தாட வம்புவியை

யாளும்பெருமா னயிராவதத்தரசும்
வேளுஞ்சமானமெனமேற்கொண்டா னூளு

மலையைக்கவிந்துவருமாமயில்போற்கும்ப
முலையைச்சுமந்தமின்னார்மொய்த்தார் நிலவரமாய்த்

தண்டிகையிலேறிவருந் தையலர்செந்தாமரைமேற்
கொண்டிசையுறுசெம்பொற்கொடியானார் கண்டபிற

நாகமிசையிருந்த நாரியரெல்லாருமலை
மேகமிசையிருந்தமின்னானா ராகையினு

லேயும்பரிமேலிருந்தமின்னார்பாற்கடலி
லாயுந்திரைமேலனமானார் தேரயிரத

மானகோலாறுவண்டியாங்கிருப்போரிந்திரவி
மானமேற்றேவரம்பைமாரானார் தானும்

பதுமமலர்மங்கையைப்போற் பாவைநல்லார்சூழ
மதுமலர்ப்பூஞ்சோலை தனில்வந்தா னதுபகரில்

வானத்துறும்பலவேமாவும் புறம்பலவே
கூனக்குரங்கின் குழாம் பலவே யீனத்தி

லேறுமலைத்தேங்கு மிரவிதொடுத்தேங்கு
மூறுமதுச்சோலை யுறத்தேங்கு மீருமலர்

சேர்க்குநிறையத்தளியே சேரடவியத்தளியே
யார்க்குமதன்பாளையத்தளியே நீர்க்கரையில்

வாயிலிடுங்கூட்டமரும்பைங் கிளிக்கூட்டங்
காயுங்கனியுங்கவிக்கூட்ட மாயதிரு

விந்தவனம்வந்தோர்க் கெழுந்தவனநீக்குமது
சொந்தவனமாமலருந்தூற்றுமே சிந்தை

யறிவானரம்பை யமரமேலாகிச்
செறிவானவனையுமுன் சேர்ந்து குறியாகி

[illegible]யுங்கருமஞ்சுரபியுங் கொண்டேந்துதலாற்
றேயுமமராபதியாஞ் சோலையிலே வேயிசைபோல

வண்டுமுழங்கவிராயாங்குயில்ராகம்படித்துக்
கொண்டுவரமயில்கள்கூத்தாடக் கண்டுவந்தான்

கந்தாடுந்தந்திக்கருக்கோட்டைவேந்தன்முன்னே
பந்தாடினொருத்திபண்பாலே நந்தாத

பொன்மாதுநின்றடிக்கும்போதெழும்பும்பந்துவந்து
தன்மார்பின்முட்டாமற்றட்டினதும் பின்மாறிக்

கொங்கைக்குமேலெழும்பக்சொவ்வையிதழ்தீண்டாம
லங்கையினூற்றட்டியமைத்ததுவு மெங்கள்பிரான்

பார்த்துமடமயிலேபந்துனக்குநாயகனே
சேர்த்துவிடாமற்புலவிசெய்தனையே வார்த்துணியக

காட்டுமுலையுங்கனியிதழுந்தீண்டாம
லாட்டுமிருகையாலடித்தனையே மூட்டியந்த

தையலுடன்சேர்ந்தன்றேதட்டியமைத்தனையென்
றையனுரைப்பவணங்கைத்தா னொய்யாம

லம்மனையைத்தொட்டொருத்தியாடினாடுதலுஞ்
செம்மலர்க்கைவிட்டெயராது செல்வதுவுங் கைம்மலரின்

மீதுவருவதுமின்னனையாளெற்றுதலு
மேதுசெயும்போகவரவெய்த்ததுவு மீதெல்லாங்

கண்டான்முலைப்புடைப்பைக்கண்டுபயந்தம்மனையுந்
திண்டாடிமேலுலவிற்செல்லுங்காற் றண்டாம

லண்ணாந்துமேற்பார்த்ததைப்பார்த்துநாம்புகுந்தால்
விண்ணாந்தலத்தும்வந்துமேவுமென்றே யுண்ணடுக்

கெஞ்சியபயத்தம்வந்துகேட்பதுபோற்கைப்பிடித்து
மஞ்சியதென்றெண்ணியமைத்திலையே வஞ்சியே

யென்றுரைக்கமார்பிலிணைத்தாளிரண்டுமுலைக்
குன்றுடனேசேர்த்துறவுகூட்டினாள் என்றியுமே

செய்வாளைசங்குடைக்குந்தென்னிளசையூரன்முன்னே
மைவாளைவீசுமதர்விழியாள் கைவாளை

வீசினனிற்குமந்த வேளெடுத்தபாணமெனும்
வீசினனிற்கரும்பின்மேவாதே காசலையா

யேடுதனையெடுத்தி ரிந்தவிடுவிச்சுமல்லா
லேடுதனைநீனைத்திரொன் செய்திர் மாதுநல்லீர்

கத்திக்குறையாதோ காளேங்கருங்குயிலுங்
கத்திக்குறையாதோ காமுகனை யெத்திக்குரு

சுற்றமடிக்குந்தடர்வாளன்றேநீருந்
சுற்றமடிக்குந்துணைத்தனமே யுற்றீரோ

யெந்தவகையாலே யெடுத்துவகையாலே
சொந்தவாடொட்டதுகையாலே யந்தவகை

கண்ணிலிருவாளைக்காட்டிச் செருவாளை
மண்ணிலடங்கவருவாளை யெண்ணியே

நீசினவாதுநெடியப டைவாளை
வீசினவாதுவிலக்கென்றே பேசியே

வீர்சபதத்தையுடன்வந்த பதுமாபதியு
மேசபதத்தைவிளைத்ததுபோ னேசித்

திருவீரும்பந்தையிணைத்தடிக்கவிங்கே
மருவீரொனவுரைக்கமாதர் கரமலரா

லொன்றுந்தரமாக வோங்கியபந்தேந்துமடி
யொன்றுந்தரமாகவுற்றெழும்பச் சென்றவிசை

யுத்தடிக்கும்போதவர்மார்பத்தடிக்கொண்டோங்கியரு
பத்தடிக்குங்கொங்கை பணைத்தசையுந் தத்துமடி (ம்

நூறடிக்கும்போதுநுடங்கு மிடையாகுமிள
நூறடிக்குங்கொங்கையினுநொந்திடுமே யேறுதொகை

யாயிரங்கையோவடித்தாயங்கைசிவந்ததுமெய்
யாயிரங்கையோவெனமின்னுருணைத்தார் நேயமாய்ப்

பத்தாயிரம்விசைசெம்பந்துமுலைக்கேறவொரு
பத்தாயிரவிசையும் பற்றுதலால் வித்தாரஞ்

செய்தவணைமுலையாருஞ்செய்தவணைப்பார்த்தானம்
பெய்வதெவணையேவணையோ மெய்த்தனைய

வுந்தியுரோமவொழுங்கேகயிறாகப்
பந்திணைமுலையேபம்பரமா யந்தரத்தி

லாடவிசைந்தங்குவிளையாடவருமங்கையர்க்கோ
ராடவர்சிங்கங்கொடுத்ததாடகமே நாடியே

யங்காரமாமுலையாரந்தமரச்சோலையிலே
சிங்காரம்பார்க்கவென்றுசென்றாரோ பைங்காவி

லெவ்வொருவர்தாமுமிணைந்திருவராகநின்றே
யொவ்வொருவார்த்தையுரைக்கின்று ரவ்வவையே

தென்னமரத்திற்றிரண்டநெற்றைப்பார்த்தொருத்தி
யுன்னியிவளன்னைமுலைக்கொப்பென்றாள் பின்னையவ்ள்

கொம்மட்டிமாதுளையின்கொத்துப்பழத்தையிவ
ளம்மைக்குமம்மைமுலையாமென்றாள் விம்பியவண்

முள்ளேறுபட்டமுழுக்கூவிளம்பழமுன்
னிள்ளேறுபட்டமுலைக்கிணையமென்று ஞள்ளபடி

யேற்றுகமுகிலிருந்தவடுவென்பிடரிக்
கிற்றுநகம்போற்கிடக்குதென்றுண் மாற்றியிவர்

சொல்லவொருத்தி துணைவனொருவனென்றே
யில்லைகலாதிருக்குமேந்திழையாண் மெல்லவே

மந்தியைக்கல்லாலெறிந்தாண்மற்றதுதேமாங்கனியைச்
சிந்திவிடவாவிச்செலத்தில்விழ முந்தியே

தாமரைப்பூவேந்தவதுதானேபருத்துரத்த
தேமன்முலையேந்துசெங்கையாய்க் காமரதந்

தன்னையகனையெண்ணித்தன்முலையைப்பார்த்துநிற்கு
மின்னுண்முகம்பார்த்துவேறொருத்தி சொன்னாள்

மிந்தமலரிலிருந்தானிமேலே
வந்தடரும்வண்டுவெடுப்போலு மந்தப்

பொதுமாதர்கொங்கையதுபோலிருக்குமென்று
ளதுதான்வெறுப்பாயயர்த்தா ளிதுபகரிற்

போரிருட்டிவாகரனைப்பொன்சொரிதுவாகரனை
யாருமதிக்குமறிவாகரனை மேருவிலே

சென்றடித்தகோமானைச்செல்வப்பெருமானை
மண்டலத்தைத்தாவிவருவானை மின்மச்

சரமெடுத்தெய்வானைத்தருங்கொடைக்குவானை
மரபுதப்பாநல்லசில்லவானைப் பரவினே

னைசயவன்பாலேயானுமன்பாலே
பேசவறியேனென்பெண்பாலே வீச

யெழுகமுகமேயெனதுமுகமே
முழுதுந்துளைசமுகமே பழுதின்றிச்

சாருமுத்தியானமேசாற்றுமத்தியானமே
சேருமிச்சைமாறுத்தியானமே காருலவி

ரீதமருங்காவிரோவேளிருப்புக்காவிரோ
காதல்கொண்டவென்றுயிரைக்காவிரோ போதுங்

குருக்கத்தியாதுங்குயிற்கத்தியுள்ளங்
கருக்கத்தினைக்குமுருக்கத்தி பெருக்கமா

ரீரமுள்ளமாவிலையேயேறுமடன்மாவிலையே
மாரன்வளைப்பதுமாவிலையே பாரப்

பலவிழுழுங்காயேபனைத்துநெருங்காயே
கலைமிடுவெளிரங்காயே குலவியதே

மாங்கனியேநான்விரகமாங்கனியேநானுநெஞ்சுந்
தேங்கினமேவித்தகைக்குந்தேங்கினமே யோங்கிவளர்

காவலேகோங்கேயென்றுவலேசொல்லுநா
றுவலேறேவருமாறுவலே பூவுலகை

யாளும்வெங்கடேசுரொட்டறுதிமால்போல்வளரு
நாளுமலருநகைமுகமுந் தோளுமு

வனசமலர்க்கையுமலர்மடந்தைசேருங்
கனசமுகமானகடைக்கண்ணு மனுபதிதன்

செக்கச்சிவந்ததிருவுருவுமொக்கலையின்
பக்கத்தமைந்தபடைவாளு மிக்க

கடுங்கணுமோதிரமுங்கைச்சரமுஞ்சுற்றி
யுடுக்குஞ்சலவையுடையும் வடிடமா

யெந்நேரங்கண்ணுக்கெதிரேவரக்காணு
மந்நேரங்கட்டியணையேனோ முன்னேபோய்த்

தொட்டுக்கொளவாகவாமிகவாமியென்
றெட்டுத்தரநாணியம்பினே னெட்டி

மடிபிடிக்கக்கிட்டவரக்காணேன்பின்னே
மடிபிடிக்குங்காரியமுண்டாமோ துடிதுடித்தே

னையோவுருவெளியையாசைக்காணவனென்றே
சையோகஞ்செய்யத்துடித்தேனே பொய்யோவென்

றெண்ணிமலைக்கையிலேயென்னுயிர்போல்யான்புரிந்த
புண்ணியம்போலிட்டதெய்வம்போலவந்தாய்பெண்ணா
வாசந்துரைக்கவிசுவாசந்துரைக்குமிது (சே
வாசந்துரைக்கமணைக்குமே பேசியவுன்

வாசகமேசெந்தேனும்வஞ்சகமேதுன்னைமெய்க்கும்
பூசகமேயென்னுடல்பொன்பூசகமே மோசமில்லா

வாக்குத்தரமேவழுத்துமெனக்குத்தரமே
வாக்குத்தரமேயகத்தரமே நோக்குங்கா

லென்மாலைநீங்கியெழுமாலைமாற்றியெங்கோன்
றன்மாலைவாங்கித்தரவேணும் பொன்மாதே

யென்றனைநோக்கியெழுந்தானைநீக்கியப்பாற்
சென்றனையன்பதத்தைத்தெண்டனிட்டா னொன்று

மானொருத்தியன்புமானுண்மருவவங்க [சொன்னுண்
மானுள்விளம்பம்வரலாமோ வானூம்

வட்டமுலைமீதுவல்லவட்டமிட்டாள்செந்தேனு
வட்டமயல்கொண்டாளேமாதொருத்தி யிட்டமிருங்

காமனிரதிகொடைக்காமனரசிநடுங்
காமனதிலாசையடங்காமனின்று டேமணக்கும்

வாயருமையாமவளேமாதருமையோவிரங்கார்
தாயருமைவாளிதனையழைப்பார் நேயமிருங்

கொம்பனைமேலாகக்கொழும்பனையேவேண்டிமலை
ரம்பனைநொந்தாளதட்டுமோர்ப்பனையே சம்பிரமக்

காரிமனவெப்பமுமாங்காரிவிடாள்பைங்கனியுங்
காரியமுதுங்கசந்திருந்தாள் ௪௨

மனகமிருண்டவல்லேயாசையவாவல்லே
வளருமுலையிரண்டும்வல்லே யிளமயில்போ

னீங்காமலர்க்காவினின்றுடனக்காவி
பாங்கானமுல்லைவிழிபைங்காவி யாங்கானு

மெய்க்கமுகமேமிடறுமதிமுகமே
யொக்குமதன்போருமொருமுகமே செக்காநிற்

வாரிசப்போதங்கையேமாரன்வந்ததங்கையே
சாரும்வடிவிரதிதங்கையே நேருணாக்கில்

வாமமுனிதம்பமேவாசனைகதம்பமே
சாமியவட்குனதுதம்பமே நேமிக்கும்

வானவரம்பையேமாருவரம்பையே
யானதொடையுமரம்பையே நானறிய

வைத்தவிருப்பேவளருமனவிருப்பே
மெத்தவுடனும்விருவிருப்பே சித்தசனை

வெல்லுமனசோதிடமேவெற்றிலைப்பேச்சோதிடமே (ள்
சொல்லுமெனக்கேட்பதுவுஞ்சோதிட மேவல்லியன்று

கைக்கூடல்விட்டாள்கணைக்கூடலோதனமு
மைக்கூடல்வந்துவளைக்குமென்று டைக்கு

முலைக்குமுலைக்குமுளரிமலரொன்றுன்
மலைக்குமலைக்குமனமே சிலைபடா

லடிக்குமடிக்குமலையொலியென்றுள்ள
நடிக்குநடிக்குமுதநட்ப னெடிக்குமவன்

வெள்ளைமதியம்வெதுவெதுப்புங்கண்டருமைப்
பிள்ளைமதியும்பிரியாதோ வெள்ளமோ

வூசிக்குமாரனுறுபடையென்றுண்மனதங்
கேசிக்குநல்கமனுக்கேயென்றுள் வீசுகின்ற

மோகவலையேதவிருமோகவலையேகவுமப்
பாகவலையேமதியைப்பாம்பென்று ளாகையினு

றப்பனையேசொற்பனையேசற்பனையேகற்பனையே
யப்பனைவாய்நட்பனைவாயார்ப்பனையே யிப்படியே

காமனையேசேர்குயிலேகாமனையேகூவுதல்பாங்
காமனையேகூவவென்றுகட்டுரைத்தா டேமலர்ப்பூங்

கோதாயென்செய்தியவர்க்கோதாயுடலைவெறுங்
கோதாய்மதியுருகுநசிக்கொண்டதென்றாள்   மீதே

வருந்தென்றலையும்வருந்தென்றலையு
மிருந்தென்றலையிலெழுத்தென்றாள்   பொருந்துந்

தனக்கும்பத்தாள்விரகதர்கந்தணிய
யுனக்கும்பத்தாள்விடுவளோகோ   வெனக்கு

மொருகோடிசொன்னாளுபசாரநானு
னொருகோடிவந்தேனையையா   திருவுளத்துக்

கேத்தபதுமினிப்பெண்ணின்பரசதாளிவெள்ளம்
பூத்தமலர்க்கொடியைப்போலசைவாள்   கோத்தணியு

முத்தாரக்கொங்கைமுழுக்கூவிளம்பழமாம்
யித்தாரமாமுவமைவேறுண்டோ   வித்தாக

வார்க்குமனதிலரும்பவருங்காமமுளை
பார்க்கில்வயதும்பனிரண்டே   தீர்க்கமா

மெட்டுமணத்திலிதுவுமொருபணமாய்த்
தொட்டுமருவவரத்தாதுவிட்டா   டொட்ட

மருவுமணமுமெனமாறுமலுன்னை
மருவுமணமுமனதா   யொருதரமே

நூறுதரமாகவென்னைநோக்கியுரைத்தாளிதற்கு
மாறுதரவெண்ணிவருந்தாளோ   சிறும்

விதனமதனைவிலக்கென்றுசொன்னா
ளதனைமனதிலறிந்து   சதுரன்

மதுரமிருதுவசனலளித
னதுலனனகனபயன் பதுமை

நயனமருவுநயகுணவசீரன்
புயபெலவானெட்டபுரேச னியல்பாய்த்

திசையிலரசர்திறைதரக்கண்டுள்ள
மிசையும்வெங்கடேசுரெட்டமேந்த்ரன் விசயனையுங்

காமனையும்வெல்லவல்லகட்டழகன்கேட்குமுன்னே
யாமவனைநாமுமறிவோமென்றான் றேமலர்ப்பூந்

சோலையிலேநின்றாள்சொருகுகுழல்கோதினாள்
சேலைநெகிழ்த்துடுத்தாள்சீமாட்டி யோலை

குழையைத்திருத்தினாள்கொங்கையசைத்தா
ளிழையைப்பொருவுமிடையெங்குந் தழையைப

பறித்துத்தன்வாயில்வைத்தாள்பார்வையினாலென்னைக்
குறித்துப்பார்த்தணைத்துக்கொண்டா ளறிக்கை
யுள்ள
மாதவளைக்கூட்டியிங்கேவாவென்றானென்றனையு
மாதரவாய்த்தூதியழைத்தாளே நீதியுள்ள

செங்கோன்மைசெய்யும்செகவீரராமனென்னு
செங்கோனையான்கண்டிறைஞ்சினே னங்கே

கவித்தகூடாரமதிற்கட்டுதிரைக்குள்ளே
புவிக்கரசன்முன்னேநான்போனேன் றவப்பேறே

கண்ணேமணியேகனகமேசெங்கமலப்
பெண்ணேகிடையாதபேரமுதே பெண்ணரசே

யின்பரசமேவருகவென்றானவன்பதத்தை
முன்பரவினேனவனுமுந்நிதொட்டா   னன்புடனே

பூவிரித்தமெத்தையின்மேற்போயிருந்தேனென்னையவ
மேவுதற்குப்பட்டுவிரிப்பானே   காவில் (ன்

வருமுத்தமீயென்றான்வாயிதழையூட்டி.
யொருமுத்தமீயென்றுரைத்தான்   மருவித்

தழுவணையிற்சாய்ந்துதனைத்தானெருக்கித்
தழுவணையென்றேயுரைத்தான்சாமி   புழுகுடனே

சந்தனத்தைப்பூசிச்சவாதையெடுத்துக்கழுத்தாரு
சந்தனத்தைச்சூழுத்தடவினான்   முந்தியிலே

பாகருத்துமென்றாருள்பாதியுந்தாவின்னம்வெறுப
பாகருத்துமென்றுபகர்ந்தேனே   மோகி

முலையைப்பிடிகொடுத்தேன்முத்தமிட்டுத்தாம
முலையைக்குழலில்முடித்தான்   சலவை

யுடையுங்கலையுமுரிந்தானப்போதே
யுடையுங்கலையுமெனதுள்ள   மடடா,

வடித்தொடைக்குட்கையைவைத்தானங்கேவலைவந்
தடித்துடைக்குங்காமவெள்ளமையோ   மடிக்குள்
கைவைத்தா
னல்குலுக்குமேல்விரலினாலளைந்துசுற்றவுமை
யல்குலுக்குமாவேசமாகாதோ   நல்குரு

செவிக்குணுனிநாவளையச்சித்தசன்றன்மந்த்ராரு
செவிக்குமருள்போலத்தியக்கு   மவசரமாய்த்

அடம்பைக்கொய்த்துடித்தவிதழ்துய்த்திருக
அடம்பையமுதூறச்சுவைத்தேனே மெய்ப்பாய்ந்

தடவரையையென்றேனென்சாமியுமென்கொங்கைத்
தடவரையிலேவடுவைத்தான் படபடெனச்

சையோகஞ்செய்யச்சகியேன்வெகுமயலாச்
சையோகரசத்தனமின்றாவென்றேன் மெய்யே

கரங்காமதரனுக்குவளக்கட்டியணைத்துப்போ
கசங்காமற்செய்யென்றுகடிந்தே னிசம்போல

வூடலுக்குஞ்சற்றேயொருமித்தான்வேள்கணைமெய்
யூடலுக்குமென்றேயுளநினைந்தேன் கூடவா

முத்தையாவென்றேன்முகந்திரும்பிக்கன்னமிசை
முத்தையாவென்றேமொழிகின்றேன் றந்துகணைக்

காமனேவந்தினிமேற்கைகலப்பானென்றுயிரைக்
காமனேயென்றிரண்டுகையெடுத்தேன் மாமதனை

பூசையோதாழ்வாகப்போமோசவாதையின்னம்
பூசையோவென்றுபுலம்பினேன் பூசைவந்து

வாய்க்கவினையாட்குரசம்வாய்க்கநிறைவாய்க்கவுற
வாய்க்கவுளையூட்டமனம்வாராதோ சிக்கிரமாய்க்

கட்டுமுலையாளையிறுக்கட்டுமெதலிலைநடக்
கட்டுமென்றுசொன்னமொழிகட்டாதோ கிட்டவந்து

கைக்குளணைமென்மலர்ச்சேக்கைக்குளளைவைத்திரு (கொங்
கைக்குளும்வாய்வைக்கிலென்னகைக்குமோ மெய்க்
கலவி

செய்யவாவென்றிழுத்துச்செங்கையினுற்கட்டினேன்
பையவாயூறல்பருகினே — னையனெனை

முத்தமிட்டபோதுமுழங்கும்புறுப்போலச்
சத்தமிட்டுக்கட்டித்தழுவினேன் ; — மெத்தவிரி

தட்டுநிதம்பந்தனைத்தடவியங்குலியாற்,
றொட்டுநடுமணியைச்சுற்றினுன் — மட்டுண்டோ

தேகபரவசமேசிந்தையவன்வசமே
யாகவிருந்தவசமே — போக

மலம்பிவடியுமென்றேயாற்றுமல்வாயும்
புலம்பியுடலயர்ந்துபோனே — னிலம்புரந்த

மன்னனெனைக்கையாலேவாரியெடுத்தான்மயக்கி
யென்னசெய்வானேமடியிலேழுினேன் — பின்னுகின்ற

கொக்குமரத்தொருகொப்பின்மயிற்பெடை
யொக்கவசைத்ததையொத்ததுசிக்கென

வட்டமுலைக்குளும்வைத்தநகக்குறி
பட்டதுபற்குறிபட்டதுபொட்டென

வெக்கியெழுப்பியுமெட்டியுயர்ச்சியு
மொக்கிடுமெய்த்தொழிலுச்சிதவக்கணை

யெத்தனைதத்தாமெத்தனைசித்திர
மெத்தவிளைத்தொருமித்தொருமெத்தையில்

வந்துவிழுந்ததுவண்டுபரந்தது
கொந்தளகம்புனைகொந்தலர்சிந்தின

கொங்கையெனுஞ்சிறுகும்பநெருங்கவு
மங்கையழுந்தவுமங்கமுமங்கமு

மொன்றினசிந்தனையொன்றுநினைந்திலை
யென்றுநினைந்ததுமென்செயலன்றிது

காமவித்தையென்பதவன்கைவந்தவித்தையொருச்
சாமமட்டுஞ்செய்யச்சலிப்பானோ மாமயிலே

சின்னஞ்சிறியேனோசித்தசன்மார்க்கமென்ப
தின்னந்தெரியாதேயென்செய்வேன் கன்னி

யறியாதவென்னையலக்கழித்துக்காம
வழியோடத்திவகையாய் மொழியும்

வகைக்காரச்சாமிமருவினனின்மெத்தத்
தனைத்தேனோகாமந்ததும்ப முகத்தை

முகத்திலணைத்தணைத்துமுத்தமிட்டான்காம
சுகத்தைவருத்தித்தொடையை யகட்டி

நெருக்கியசைக்கநிறைந்தசலராசி
பெருக்கியுடைத்ததிருபோர்க்கும் விருப்பம்வர

மோகந்தணிந்தேன்முழுதுமெனக்கின்பவனு
போகங்கிடைத்ததிறற்பூரித்தே னோ

சயனத்திருத்திச்சரீரமுழுது
நயனத்திறற்பார்த்தானன்று யியலு

மயிலேகுழலுமழையேவிழியு
மயிலேயிடைநூலலவோ நயமான

பொற்றட்டினிலப்பொடிபரப்பிவைத்ததன்றே
ற்றகடிதடத்துரோமமென்றான் கொற்றவனு
மிந்தவகைசொல்லவெனக்குமனதுவெட்கம்
வந்துதுகிலான்மறைத்தேனே யிந்திரவிற்
போலேயிருக்கும்புருவத்துவேர்வையைக்கை
யாலேதுடைத்தானருமையிட்டான் மேலாய்த்
தெரியுங்களபச்சிமிழ்முலையைமூடச்
சரிகைரவுக்கைதரித்து நெரியுங்
கருவளையைநீக்கிக்கனகவளைசாத்தி
யிருசரணிற்பொற்சிலம்புமிட்டு வரிசைய
பணிதையெல்லாம்ரத்நப்பணியாயணிந்தான்
றணிவிலாமாமோகந்தந்தா னணியுமழ
கெல்லாமவன்பார்த்தானென்மனதுக்கேத்தவனி
யல்லாமல்வேறொருவராகாதே நல்லாளே
யுன்னைமறவேனொருகாலமும்பிரியே
னென்னைமறவாதேயென்றுரைத்தான் பின்னையுமே
யன்புபொருந்தியுனக்காதரவுபேசியவாய்
பின்புமொருவருடன்பேசுமோ முன்புனது
கொங்கையணையக்குழையத்தடவியவென்
செங்கைமறுமாதர்முலைதீண்டாதே பங்கயப்பூ
வன்னமேயுன்வாயதரமருந்துமென்வாய்க்
கின்னமொருவரிதழேற்குமோ சொன்னதெல்லா

மெய்யேயென்றாணையிட்டவேந்தனுக்கென்சொல்வேனெ ன்
மெய்யேமுழுதும்விலையானே னையனெனைப

பூங்குயிலேநம்மனைக்குப்போவோமென்றானெனக்குத்
தாங்குமணித்தண்டிகையுந்தந்தானே யோங்கு

மதவானையைக்கொண்டுவருகவெனமேற்கொண்
டிதமுடனேயேறியிருந்தான் பதம்வருடும்

வேந்தரெல்லாம்வாம்புரவிமேலேறினார்புவன
மாந்தரெல்லாஞ்சூழவருகின்றார் சாந்தமுலைப்

பொன்னேயுமங்கையரும்பொன்னாட்டரம்பையர்போன்
முன்னேயும்பின்னேயுமொய்த்துவந்தார் சொன்னே யப்

பாடகருநட்டுவரும்பாங்கில்வந்தார்பல்லியங்கள்
கூடமுழங்கிக்குமுறுமே சோடாய்க்

கரடிநவுரிகனகதப்புமொந்தை
பெரியவீராணம்ரணபேரி முரடுதுடி

சல்லரிபம்பைதடாரிதவின்முரசு
மல்லரிதக்கைவகுப்பாக வொல்லெனவே

நாகசுரத்துடனேநாலுதிக்கும்பூரிகையு
மேகசுரமாய்முழங்குமெங்குமே யாரும்

வலம்புரியும்வால்வளையும்வாங்காவுங்கொம்பு
நிலம்பரவவெய்துநிரையிற் றுலங்கப்

பூதிவுதருபஞ்சவனப்பக்கரையிட்டேறுங்
குதிரையின்மேல்ராயராகுத்த னதிசெயவான்

வங்கர்தொழூழுவரகண்டவெண்டையத்
துங்கவுரிகோலசுரதாண னெங்கும்

தளங்கலன்டுதத்தளிப்பார்தங்களுக்குமிண்டன்
வளங்கொண்டசந்த்ரகிரிமன்னன் றளங்கும்

பரசமாராசர்பகையிருளைநீக்கு
மிரவிகுலோதயநரேந்த்ரன் முரனு

திருபர்சமரநெளிநெளியச்சீறிப்
பொருதுவருசார்வபூமன் சொரியுங்

கடகரடகும்பகராசலமேற்கொண்ட
திடமருடபாரசுப்ரதீபன் வடகர்

குடகர்கவுடர்குருநாடர்சென்னி
தடவுபதயுகப்ரதாபன் கடலி

னமுதநயகுணவொய்யாரவதிகார
சுமுகசெயதரசுபாகி தமிழருமை

யேதுமறிந்தவெங்கடேசுரெட்டன்வந்தானென்
னாதுமணித்தாரையுடனூர்க்க மோதியே

சேகண்டியுமணியுஞ்சேரவொருபேரணியாய்ப்
பூகண்டமேங்கப்புடைத்துவர வேகமாய்க்

கொம்புமுரசுங்குமுகுமெனப்போர்விசயக்
கொம்புந்திருவுமின்றுகூத்தாடக் கும்புகும்பாய்த்

தம்புருவீணைசரமண்டலமெடுப்போர்
தும்புருவாயோர்வகுப்பிற்சுற்றிவர வம்புவியைக்

காக்குநிருபன்கருங்கோட்டையாதிபதி
தாக்கும்விசயச்சமர்பாடி   வாக்குடைய

பாவலர்கள்சொன்னதமிழ்ப்பாடன்மிகப்படிக்கு
நாவலருமேனர்வகுப்பிறுடிவர   மேவியே

தித்திமுகவீணைசிங்குழலுங்கைம்மணியு
மொத்திசையநட்டுவர்களொக்கடிக்க   மத்தளத்தின்

சத்தமுழங்கச்சதிமுறைதப்பாதபடி
சுத்தராகத்தின்றொனியதிர   மைத்தடங்கண்

மின்னுடம்புரிந்தாண்மின்வெட்டியார்த்ததுபோ
லந்நாளுருவசிவந்தாடுதல்போன்   முன்னாக்

கால்வைத்ததுங்காணோங்கண்மருட்டுங்கண்டறியோ
மால்வைத்தசிந்தைமயங்காதோ   நூல்வைத்த

சிற்றிடையொசிந்தெழுதுசித்திரமசைந்தபடி
முற்றிழைகலந்துவிழமுற்சருவி   மற்றுமொரு

பம்பரமசைந்தபடிபந்தெனவெழுந்தமலை
கும்பகுடமென்றசைவுகொண்டதொரு   சம்பிரம

மிந்தநடனம்புரிவதெந்தவகையென்றமரர்
வந்தனர்கள்வந்தனையுவந்தனர்க   ளந்தவகை

செந்திருவன்னாளுந்திருநடனஞ்செய்யமின்னார்
கந்திருவப்பாடல்களிந்திசைக்கத்   தந்திபின்மே

லிந்திரன்போலெங்கள்வெங்கடேசுரெட்டமேந்திரன்வர
ப
பூந்திமகிழுந்தெட்டபுரத்திலுள்ளோர்   சந்திதொறுந்

தோரணங்கணாட்டிச்சுவர்த்தலத்திற்கோலமிட்டுப்
பூரணகும்பம்பொலிவித்துச் சேருந்

தலைவாசறோறுநிழறந்தபந்தலிட்டு
நிலைதோரணியாய்நிறுத்திக் கலவையுடன்

கோதியசாந்தக்குழம்பும்பனிநீரும்
வீதிதோறுங்கொட்டிமெழுக்கிட்டுப் பாதைதோறும்

வாசநிரப்பியட்டமங்கலமெல்லாம்பரப்பித்
தேசமெல்லாம்வந்தொருபாற்சேர்ந்ததுபோற் பேச

வலங்கரித்தபட்டணத்தையண்டர்பிரான்போல
வலங்கொளவேயெம்பெருமான்வந்தான் றுலங்கு

மடக்கொடியார்கூந்தன்மழையிருட்டுக்குள்ளே
யடக்கியசெம்மாலையணிந்து திடப்படவே

சந்திரனுக்குள்ளேதபனன்முளைத்ததுபோற்
செந்திலகச்சிந்தூரந்தீட்டியே யந்த

மலைமின்மழைபெய்தமுகில்வந்திருந்ததென்ன
முலையைரவுக்கைகொண்டுமூடிச் சிலைமாரன்

தேருநிரைத்ததிரைபோலப்பொன்னுடை
யூருமறையவுடுத்தியே பாரச்

சிலம்புபதத்திலிட்டுச்செம்பொற்கடக
மலம்புவளைகையிலணிந்து நலம்புரியும்

பொன்னாபரணம்புணர்முலைமேற்பூட்டினார்
மின்னுமெனவேவெளியில்வந்தா ரந்நாரி

லம்பனையகண்ணாரவனைச்சிவந்தகிருஷ்ண
விம்பமெனவெவ்வண்ணரிவிளம்புவார்　　　பம்பு

மிடைச்சியரைக்கூறைகொண்டாயென்பாரொருசிற்
றிடைச்சியரைக்கூறைகொண்டாயிந்நா　　　ளெடுத்த

கரவனையாய்க்கொண்டதன்றுகாணுமேமாதர்　　　(கக்
கரவனையைக்கொண்டதின்றுகண்டோநினை　　　யொருங்

கைக்குடையாமேல்வரையைக்காட்டினைவேளம்பெம்முது
கைக்குடையாமேவரையக்காணுமே　　　மிக்க

வடமதுரைக்குந்தலைமைவாய்த்தனைதாய்வைக
வடமதுரைக்குருசமரமாற்றாய்　　　இடமாகக்

கோவியப்பாவையரைக்கூடினையெங்கட்குமென்றைக்
கோவியப்பாவையென்றுற்கூடாயோ　　　காவலவர்

சிங்கமேயென்றுதெரிசித்துமாதர்பிர
சங்கமேசெய்யத்தயவாகி　　　யெங்கடுரை

கண்ணாலெவர்க்குமின்பங்கட்டளையிட்டேவிரும்பும்
விண்ணாடுபோலுமற்றோர்வீதிசென்று　　　ணுண்ணாடிரு

சைவர்மடசத்திரத்திற்சங்கரக்குமாருநித்த
மெய்விரவினாலேவிசாரிக்கத்　　　தெய்வச்

சிவனடியார்தங்கள்பசிதீரவமுதுண்டு
புவனதரனைப்புகழ்ந்து　　　நவிலு

மரகரவென்சத்தமதிரமடமாதர்
குரவைமுழக்கங்குமுற　　　விரைவாய்

மறையோர்களாசிவனைகடல்போலார்க்க
முறையாகப்பட்டர்முழங்க நிறைவுதரு

மாகதர்கள்வந்துமகராசனைமிருந்த
யோகதரவிசயவுத்துங்கா நாகரிக

விமாவதாரரணவீரவிக்ரமார்க்கரகு
ராமாசெகவீரராசேந்த்ரா சோமா

வனகாசம்பன்னவதுலாவிற்பன்ன
கனகாபிஷேகசொடைக்கன்ன தனதா

சதுரமனுநீதாதமிழ்வரப்ரசாதா
பதுமவிகசிதபொற்பாதா வதிக

மிருதுரசவாக்யாவெகுபலசிலாக்யா
பருதிகுலேசசவுபாக்யா விருநிலத்தை

முற்றுமளந்தமுகுந்தாவெனத்துதிக்க
மற்றுமொருவிதிமருங்கணைந்தான் சுற்றியே

முன்னந்தம்பாய்வர்முறைமைதவறுமற்
பின்னந்தம்பாய்வர்சிலபேதைமா ருன்னியே

நின்றநிலையினிமிரவெழும்பிவரத்
துன்றியிரண்டுசுற்றுச்சுற்றிநிற்பா ரன்றியுமே

கையானதைமுதுகிற்கட்டியிருநூறுதர
மெய்யாதலாகையெடுப்பார்கண் மையாரும

தானவளைமேலேறித்தாவியொருலாகெடுத்து
மானனையார்பூமியிலேவந்துநிற்பார் தேனிகராய்ச்

சொன்னமொழியார்தொழிலையெல்லாம்பார்த்திளைசை
மன்னவனுமற்றோர்மறுகில்வந்தான் முன்னெதிர்ந்து

தாக்கும்விழிவாளைச்சமர்வாளிலேயேற்றி
நோக்குவர்வயூசிநுனியேந்தி மீக்கொண்டு

பெய்க்காலிலேறுமவர்பொன்னூட்டரம்பையர்த
மெய்க்காறனையின்மிதியாம லக்கால்கொண்

டந்தரத்தினிற்பதுபோலம்புலிமான்கைதாங்கி
வந்ததுபோற்சுற்றிவருவார்க ளிந்தவகை

சூட்சியறிந்ததுரைகள்சிகாமணியுங்
காட்சியெல்லாம்பார்த்துக்களிகூர்ந்து மீட்சியாய்

வீசாரமேல்கடலில்வெய்யோன்வந்தானிவனு
மாசாரமேல்வந்தரசிருந்தான் றேசாய்

விராவித்திவெட்டிபகல்வெத்தியுமத்தாப்பு
மிராவிற்பகல்வருவதென்னப் பராவி

யிருபுறமுஞ்சூரியனுமிந்துவுநேராக
வருவதுபோலெங்கும்வயங்க விருது

புகலுமவரும்புரவலருமற்றோர்
சகலரும்வந்தெய்துஞ்சபையின் மகராசன்

கண்ணுந்திருமுகமுங்கையும்பதயுகமு
மெண்ணுங்கமலமெனமலர நண்ணுதலா

லட்டலட்சுமிக்குமிடமாகுநெடுமாலெனவே
கட்டழகுபெற்றானயோகன் றிட்டமிருங்